சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்– கல்வி – விடுதிகள் – 2016-17ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி 10, 12ஆம் வகுப்பு மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance Programme) நடத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை

அரசாணை (நிலை) எண்.70

நாள் 16.12.2016
துன்முகி, மார்கழி 1
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது :

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண். சி2/5408/2016, நாள் 14.10.2016.

* * * * * * * *

**ஆணை:**

2016–17ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி 10, 12ஆம் வகுப்பு மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு ரூபாய் 8 இலட்சம் செலவில் வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance Programme) நடத்துதலும் ஒன்றாகும்.

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி 10, 12ஆம் வகுப்பு மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance Programme) வழங்குவதற்கு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

3. மேலும், இம்மாணவ, மாணவியருக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சியினை (Career Guidance Programme) அந்தந்த மாவட்டங்களிலேயே, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலம் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளதாகவும், இப்பயிற்சி

திட்டத்திற்கான செலவின விவரம் மற்றும் பயிற்சி வகுப்புகளின் விவரம் ஆகியவற்றை பின்வருமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | விவரம் | ஒரு பயிற்சி வகுப்பிற்கான செலவு (ரூ) | 163 பயிற்சி வகுப்பிற்கான செலவினம் (ரூ) |
|---|---|---|---|
| 1. | வாழ்க்கை வழிகாட்டி வரைபடங்கள் தயாரித்தல் | 1000/– | 1,63,000/– |
| 2. | பொது அறிவிப்பு சாதனங்கள் | 1000/– | 1,63,000/– |
| 3. | உரை நிகழ்த்தும் சமூக ஆர்வலருக்கான நினைவுப்பரிசு வழங்குதல் | 1000/– | 1,63,000/– |
| 4. | சிற்றுண்டி செலவு | 1000/– | 1,63,000/– |
| 5. | இதர செலவு | 900/– | 1,46,700/– |
| | மொத்தச் செலவு | 4,900/– | 7,98,700/– |

| பயிற்சி வகுப்புகளின் எண்ணிக்கை | |
|---|---|
| கல்லூரி விடுதிகள் | 73 |
| பள்ளி விடுதிகள் | 90 |

4. ஒரு பயிற்சி வகுப்பிற்கான மொத்த செலவான ரூ.4,900/–ல் ரூ.4000/–ஐ சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு வழங்கவும் மற்றும் மீதமுள்ள தொகை ரூ.900/–ஐ பயிற்சி வகுப்பிற்கான இடைநிகழ்வு செலவாக (மாணவர்களை பயிற்சி வகுப்பிற்கு அழைத்து வருதல் மற்றும் இதர செலவிற்கு) மேற்கொள்ள அனுமதியும் மற்றும் இத்தொகைகளை தமிழ்நாடு நிதி விதி தொகுப்பின் முதல் தொகுப்பு பிரிவு 99ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் முன் பணமாக பெற்று செலவினம் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கலாம் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மேலும், இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடம், உரை நிகழ்த்தவுள்ள சமூக ஆர்வலரின் விவரம், பயிற்சி வகுப்பு கால விவரம் ஆகியவற்றினை சம்மந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரிடமிருந்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும், மேலும் பயிற்சி நடைபெறும் நாளில், விடுதி மாணவ, மாணவியருக்கான மதிய உணவினை, பயிற்சி நடைபெறும் இடத்தில் வழங்க அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இதற்கான செலவினை சம்மந்தப்பட்ட விடுதியின் மாதாந்திர உணவுக் கட்டணத்தில் மேற்கொள்ளவும் மாவட்ட

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு அனுமதி அளிக்கலாம் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

6. மேலும், இத்திட்டத்தினை 2016–17 ஆம் ஆண்டில் செயல்படுத்தும் பொருட்டு 163 பயிற்சி வகுப்பிற்கான தொகை ரூ.7,98,700/–ஐ (ரூபாய் ஏழு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து எழுநூறு மட்டும்) உரிய கணக்குத் தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும், ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பயிற்சி வகுப்பின் எண்ணிக்கைக்கு ஏற்றாற் போல் சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு ஒதுக்கீடு செய்ய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்கு அதிகாரம் வழங்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

7. பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, அதனை ஏற்று, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி 10, 12ஆம் வகுப்புகளிலும் மற்றும் கல்லூரிகளிலும் பயிலும் மாணவ, மாணவியருக்கு இணைப்பிலுள்ள வழிமுறைகளை பின்பற்றி, வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சியினை (Career Guidance Programme) நடத்துவதற்கு அனுமதியும், இந்நிகழ்ச்சிக்கான செலவினத் தொகையாக ரூ.7,98,700/–யினை (ரூபாய் ஏழு இலட்சத்து தொண்ணூற்றெட்டாயிரத்து எழுநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

8. மேலே பத்தி 7ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 – கல்வி – I திட்டத்தில் சேராதது – AA – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லங்கள் – 72 – பயிற்சி".

**(த.தொ.கு : 2225 03 277 AA 7206)**

9. மேலே பத்தி 7ல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 7ல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று செலவினத்தை மேற்கொள்ள பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 7ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2016–2017ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (பி.மி.பி.(ம)சி.ந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. மேலே பத்தி 7ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பயிற்சி வகுப்பின் எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல், சம்மந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்

சிறுபான்மையினர் நல அலுவலருக்கு ஒதுக்கீடு செய்ய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

11. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.65340/பிமிபி/2016, நாள் 15.12.2016-ல் பெறப்பட்ட ஒத்திசைவுடனும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேட்டு எண்.1611 (ஆயிரத்து அறுநூற்று பதினொன்று) உடனும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை– 5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை – 2.
மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை– 2), சென்னை–18. (பெயரில்).
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை –5.
சம்பளக்கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
நகல் :
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைச் செயலர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை– 9.
நிதி (பி.மி.பி./வ.செ.பொது I & II)த் துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
16/12/2016

## இணைப்பு

**அரசாணை (நிலை) எண்.70, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 16.12.2016–ன்படி வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சியினை செயல்படுத்த பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்**

I) விடுதி மாணவ, மாணவியருக்கு வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி (Career Guidance Programme) மாவட்ட அளவில் ஆண்டிற்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற வேண்டும்.

II) இத்திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளராக அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர் செயல்பட வேண்டும்.

III) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலர் இப்பயிற்சிக்கான கல்வியாளர், நெறியாளர்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

IV) இப்பயிற்சியினை நடத்துவதற்கான இடத்தை, விடுதி மாணவ, மாணவியர் எவ்வித சிரமமும் இல்லாமல் பங்கேற்கும் வகையில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஆகியோர் சம்மந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலருடன் கலந்தாலோசித்து தேர்வு செய்திடல் வேண்டும்.

V) நடப்பு நிதியாண்டில், விடுதிகளில் 10, 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு 90 பயிற்சி வகுப்புகளும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு 73 பயிற்சி வகுப்புகளும் என மொத்தம் 163 வாழ்க்கை வழிகாட்டி பயிற்சி வகுப்புகள் நடத்திட வேண்டும்.

VI) இப்பயிற்சி வகுப்புகள் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெற வேண்டும்.

VII) இப்பயிற்சி நடைபெறும் இடத்திற்கு விடுதி மாணவ, மாணவியரை சம்மந்தப்பட்ட விடுதி காப்பாளர், காப்பாளினி பாதுகாப்புடன் அழைத்து வர வேண்டும். பயிற்சி முடிந்த பின்னர் மாணவ, மாணவியரை பாதுகாப்புடன் மீண்டும் விடுதிக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

VIII) இந்நிகழ்ச்சியின்போது விடுதி மாணவ, மாணவியர் பயனடையும் வகையில், உயர் கல்வி குறித்தும், வேலைவாய்ப்புகள் குறித்தும் பொதுவான விவரங்களுடன் கல்வி நிறுவனங்கள் மற்றும் அக்கல்வி நிறுவனங்களில் பயிற்றுவிக்கப்படும் பாடப்பிரிவுகள் குறித்த பொதுவான தகவல்கள் தயார் செய்து வழங்கப்பட வேண்டும்.

IX) ஒரு பயிற்சி வகுப்பிற்கான மொத்த செலவு ரூ. 4900/–ல் ரூ 4000/–ஐ சம்மந்தப்பட்ட மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கும், மீதமுள்ள தொகை ரூ 900/–ஐ பயிற்சி வகுப்பிற்கான இடைநிகழ்வு செலவாக

மேற்கொள்ளவும், (மாணவர்களை பயிற்சி வகுப்பிற்கு அழைத்து வருதல் மற்றும் இதர செலவிற்கு) இத்தொகையை தமிழ்நாடு நிதி விதி தொகுப்பின் முதல் தொகுப்பு பிரிவு 99–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் முன்பணமாக பெற்று செலவினம் மேற்கொள்ள அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

X) பயிற்சி நடைபெறும் நாளில், விடுதி மாணவ, மாணவியருக்கான மதிய உணவினை, பயிற்சி நடைபெறும் இடத்தில் வழங்க அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இதற்கான செலவினை சம்மந்தப்பட்ட விடுதியின் மாதாந்திர உணவுக் கட்டணத்தில் மேற்கொள்ளவும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

XI) இத்திட்டத்திற்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடம், உரை நிகழ்த்தவுள்ள சமூக ஆர்வலரின் விவரம், பயிற்சி வகுப்பு கால விவரம் ஆகியவற்றினை சம்மந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரிடமிருந்து பெற்று பயிற்சி வகுப்புகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

ஆ.கார்த்திக்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்